இல் 44 தான் ஸ்டேயில் இருக்கிறது. மிச்சம் உள்ள 15-ம் சீக்கிரத்தில் முடிந்து விடும். இதுபற்றி அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறது என்று தெரிவித்தேன். நீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹைக் கோர்ட், சுப்ரீம் கோர்டிலே இருக்கும் கேஸ்களை துரிதப்படுத்துவதற்கு, துரிதமாக அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோர்ட்டுகளுக்கு அரசாங்கம் ஏதாவது மனு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தாமதப்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. எவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்த வேண்டுமென்று வழக்கறிஞர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

கேளிக்கை வரிகள்

* 218. வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-1971, 1971-1972 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுக்கு முறையே கிடைத்த வருமானம் எவ்வளவு?

(இ) அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகப்படுத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) சென்னை கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கீழ்க்கண்டவாறு வருமானம் கிடைத்துள்ளது:—

பந்தய வரி—

1970-71-ம் ஆண்டு 178.46 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 199.46 இலட்சம் ரூபாய்.

கேளிக்கை வரி—

1970-71-ம் ஆண்டு 10.91 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 14.28 இலட்சம் ரூபாய்.

மொத்தம்.—

1970-71-ம் ஆண்டு 189.37 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 213.74 இலட்சம் ரூபாய்.

கேளிக்கை வரிச் சட்டத்தின்மூலம் வசூலிக்கப்பட்ட தொகையில் 90 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது.

(இ) 3-3-1972 முதல் பந்தய வரி வீதங்களை அரசினர் கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளனர்.

(i) மின் கணிப்புப் பொறியமைவுகளுக்கான (Electric Totalizator) பந்தய வரி. (ii) பயண ஒப்புநர்களின் (Bookies) மீதுண்டான பந்தய வரி.	15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம்.
(iii) மின்கணிப்புப் பொறியமைவுகள் நீங்கலாக பந்தயக் கணிப்புப் பொறிகளுக்குண்டான பந்தய வரி.	20 சதவீதத்திலிருந்து 25 சதவீதம்.

1972-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு குதிரைப் பந்தய வரியின்மீது 5 சதவித மேல்வரி விதிக்கப்பட்டுள்ளது.

1972-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு பந்தயத்திற்கு அனுமதிக்கப்படுவதற்குச் செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாதபோது 50 காசும், அவ்வாறு செலுத்தப்படும் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படும்போது ஒரு ரூபாயும் கேளிக்கை வரிக்கான கூடுதல் மேல்வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதற் கொண்டு அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய குதிரைப் பந்தய வரி வசூலிப்புப் பணியைக் குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து வணிக வரித்துறை எடுத்துக் கொண்டது. இதனால், குதிரைப் பந்தயச் சங்கத்திற்குத் தரகுத் தொகையாகக் கட்டப்பட்டு வந்த 1 சதவித தொகை அரசுக்கு மிச்சமாகிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that because of the recent increase in the Betting and Entertainment Taxes, there is a huge increase in private and illegal betting in the Race Course?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதுபற்றிப் புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, புதிய வரி மூலம் அரசுக்கு அதிகமான வருமானம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. மத்திய அரசு ஜாக்பாட்டிலே வெற்றி பெறுகின்ற அதிகமான தொகை பெறுகின்றவருக்கு ஒரு

1972 ஆகஸ்ட் 21]

வரி விதித்திருக்கிறார்கள். அதன்மூலம் மத்திய அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. அதே போல், நம்முடைய அரசு டபுள், டிரெபுள், ஜாக்பாட் இவைகளிலே வெற்றி பெறுகின்றவர்களுக்கு, அதிலே 10 சதவிகிதமோ, 20 சதவிகிதமோ வரி விதித்தால், அதன்மூலம் அரசுக்கு சுமார் ரூ. 50 லட்சம் கிடைக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு அதுமாதிரி வரி விதித்திருக்கிறார்கள். தமிழக அரசு வரி விதிப்பதைப் பற்றி பரிசீலிக்கலாம். ஆனால் முடியுமா என்பது சந்தேகம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சென்னை குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து இரண்டு காரி ஓவர்களை அனுமதிக்க வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதை அனுமதிப்பதன் மூலம் அரசின் வருமானத்தை அதிகரிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு நாள் காரி ஓவரைத் தான் அரசு அனுமதித்திருக்கிறது. 2 நாள் காரி ஓவரை அனுமதித்தால், தொகை அதிகமாவதன் காரணமாக, வேறு சில காரியங்கள் நடந்து, அதன்காரணமாக லா அண்ட் ஆர்டரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற காரணத்தினாலும், பணம் ரொம்ப இருந்தால், தவறுகள் இருக்குமோ என்று வதந்திகள் நடமாடுகின்ற காரணத்தாலும் இரண்டு நாள் காரி ஓவருக்கு அனுமதி இல்லையென்று தெரிவித்துவிட்டோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த குதிரைப் பந்தய திட்டம் சூதாட்ட முறையில் இருப்பதாகச் சில பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதுபற்றி அரசு என்ன கருத்தைத் தெரிவிக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சூதாட்டம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். சூதாட்டம் சூதாட்டம் தான்.

***219. வினா—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கேளிக்கை வரி மீது நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் 1972-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கிடைத்தத் தொகை எவ்வளவு?